045366

**சுருக்கம்**

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணைக்குழு (Equivalance Committee) தீர்மானம் – தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் முதுகலை பயன்பாட்டுத் தமிழியல் (M.A Applied Tamilology) பட்டப்படிப்பு, முதுகலை தமிழ்ப் பட்டத்திற்கு இணையானது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2.1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.117

நாள்: 01.08.2016
துன்முகி – ஆடி – 17
திருவள்ளுவராண்டு – 2047

படிக்க:–

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் நேர்முகக் கடித எண்.4660/RND-F1/2015, நாள்.18.11.2015.
2. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கடித ந.க.எண்.தே3/2016, நாள்.02.05.2016.

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்கள், 52–வது இணைக்குழுக் கூட்டம் (Equivalence Committee meeting) 17.11.2015 அன்று நடைபெற்றதாக தெரிவித்து அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீது ஆணை வெளியிடும் பொருட்டு அரசுக்கு அனுப்பியிருந்தார். அதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் குறித்து தீர்மானம் எண்.10–ல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் "முதுகலை பயன்பாட்டு தமிழியல் (M.A Applied Tamilology)" பாடம் முதுகலை தமிழ்ப் பட்டத்திற்கு இணையானதாகக் கருதி பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்குக் கருதலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) அவர்கள் கடிதத்தில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அகராதியியல் துறையில் பயிலும் மாணவர்களுக்கு முதுகலை பயன்பாட்டு தமிழியல் (M.A Applied Tamilology) என்று பட்டம் வழங்கப்பட்டு வந்ததாகவும், தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையில் 20.02.2014 நாளன்று நடைபெற்ற பாடத்திட்டக்குழு கூட்டத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் "முதுகலை பயன்பாட்டு தமிழியல் (M.A Applied Tamilology)" என்னும் முதுகலைப் பட்டத்தை "முதுகலைத் தமிழ்" பட்டம் என வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும், அப்பரிந்துரைகளுக்கு 09.04.2014–ஆம் நாளிட்ட ஆட்சிக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு தீர்மானத்தின் அடிப்படையிலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணைக்குழுக் கூட்டத் தீர்மானத்தின் (Equivalence Committee meeting) (பொருண்மை எண்.10) அடிப்படையிலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் முதுகலை பயன்பாட்டுத் தமிழியல் (M.A Applied Tamilology) பட்டம் முதுகலை தமிழ் பட்டத்திற்கு இணையானது என்று அரசாணை வழங்கச் செய்யுமாறு பதிவாளர் (பொறுப்பு) அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 52–வது இணைக்குழுக் கூட்டத் (Equivalence Committee meeting)

தீர்மானம் எண்.10–க்கு இணங்க, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) அவர்களின் கருத்துருவின் அடிப்படையில் ஆய்வு செய்ததில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் "முதுகலை பயன்பாட்டு தமிழியல் பட்டம் (M.A Applied Tamilology)", "முதுகலை தமிழ்" பட்டத்திற்கு இணையானதாகக் கருதி பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்குக் கருதலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், (பொ) தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
பதிவாளர்(பொ), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.
நகல்
மாண்புமிகு அமைச்சர் (இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

1/8/16
பிரிவு அலுவலர்
1/8/16